# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு செ.ம.வேலுசாமி
வணக்கத்திற்குரிய மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 10085/ 2011 / எம்சி. 8 நாள் : 10.11.2011**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் 11.11.2011 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - நவம்பர் 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | மாமன்றப் பிரிவு - நிலைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(குறள் 666)

**விளக்கம்**

செயலாற்ற முற்படுபவர்களின் மனம் வினையில் உறுதியான ஈடுபாடு கொண்டால், தாங்கள் விரும்பும் முறையிலேயே வெற்றியடைய முடியும்.

திருவள்ளுவர்

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண்: 1

பொருள் - கோயம்புத்துார் மாநகராட்சி – நிலைக்குழுக்கள் உறுப்பினா்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

பார்வை – 1) அரசு ஆணை எண் 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 6.3.2002
2) மாநகராட்சி நிலைக்குழுக்கள் அமைப்பதற்கான விதிகள் 1997ன் விதி 4 மற்றும் 5
3) மாமன்ற தீர்மானம் எண் 22 நாள் 30.04.2002
4) மாமன்ற தீர்மானம் எண் 111 நாள் 28.06.2002
5) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க. ME1/9164/2011 நாள் 9.11.2011

---------

பார்வை 1-ல் காணும் அரசு ஆணை எண் 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 6.3.2002 ன்படி, கோயம்புத்துார் மாநகராட்சியில் கீழ்க்கண்ட 6 நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. கணக்குகள் குழு
2. கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு
3. சுகாதாரக்குழு
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு
5. நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு
6. பணிகள் குழு.

பார்வை 2-ல் காணும் மாநகராட்சி நிலைக்குழுக்கள் அமைத்தல் விதிகள் 1997ன், விதி 4-ன்படி மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைக்குழுக்களின் உறுப்பினா்களின் எண்ணிக்கையினை குறைந்தபட்சம் 6, உயர்ந்தபட்சம் 15 என்ற வரம்பிற்குட்பட்டு மாமன்றம் நிர்ணயம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விதி 5ன்படி அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் உறுப்பினா்களில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பெண் உறுப்பினா்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி, 6 நிலைக்குழுக்களுக்கு அனுமதிக்கப்பட்ட உறுப்பினா்கள் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிலைக்குழுவின் பெயர் | அனுமதிக்கப்பட்ட உறுப்பினா்கள் | 3-ல் 1 பங்கு பெண் உறுப்பினா்களுக்கான இட ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | கணக்குகள் குழு | 7 | 3 |
| 2 | கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு | 7 | 3 |
| 3 | சுகாதாரக்குழு | 7 | 3 |
| 4 | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | 15 | 5 |
| 5 | நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழு | 15 | 5 |
| 6 | பணிகள் குழு | 15 | 5 |

பார்வை 4-ல் காணும் மாமன்ற தீர்மானம் எண் 111 நாள் 28.06.2002ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நிலைக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருள்கள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | குழுவின் பெயர் | ஒதுக்கப்பட்டுள்ள பொருள்கள் |
|---|---|---|
| 1 | கணக்குகள் குழு | 1. மாநகராட்சி வரவு செலவு கணக்குகளை சரிபார்த்தல்<br>2. தணிக்கை குறிப்புகளை பரிசீலித்தல் மற்றும் மாநகர வரவினங்களை கவனித்தல்<br>3. மத்திய கணக்கு குழுமம் மற்றும் தணிக்கை பிரிவு முதலிய பிரிவுகளில் இருந்து வரும் கணக்கு மற்றும் தணிக்கை சம்பந்தப்பட்ட இனங்கள் மற்றும் ஏல இனங்கள் |
| 2 | கல்விக்குழு | 1. கல்வி போதித்தல்<br>2. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்<br>3. விளையாட்டு திடல்கள் குறித்த பணிகள் |
| 3 | பொது சுகாதாரக்குழு | 1. பொது சுகாதாரம்<br>2. தாய்சேய் நலம்<br>3. இந்திய குடும்ப நலத்திட்டம் -5<br>4. மலேரியா ஒழிப்பு ஆய்வுக் கூடங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மருந்து கொள்முதல்<br>5. மருத்துவமனை கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு |
| 4 | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | 1. சொத்துவரி, தொழில் வரி மற்றும் பிற வரிகள் விதிப்பு விகிதம் நிர்ணயம் செய்தல்<br>2. மாநகராட்சி நிலங்களை வேறு துறைகளுக்கு குத்தகைக்கு அனுமதித்தல்<br>3. நிதிநிலை கட்டுப்பாடு வரவு செலவு திட்டம் குறித்து பரிசீலித்தல் |
| 5 | நகரமைப்புக்குழு | 1. நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் நில உரிமை மாற்றம் |
| 6 | பணிகள் குழு | 1. சாலைகள் பூங்காங்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு<br>2. கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு<br>3. தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு<br>4. ரவுண்டானாக்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு<br>5. மழைநீர் வடிகால்கல் அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் தூர் வாருதல்<br>6. வாகனங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல்<br>7. குடிநீர் வழங்குதல் சம்பந்தப்பட்ட பணிகள் மற்றும் கழிவு நீர் அகற்றும் பணிகள் |

பார்வை 5-ல் காணும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க. ME1/9164/2011 நாள் 9.11.2011-ல், நிலைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் பெண் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு நிர்ணயம் செய்து 11.11.2011க்குள் அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு குழுவிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளின் தன்மைக்கு ஏற்றவாறு குழு உறுப்பினர்களை நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்திற்கு முன்பு 72 வார்டுகளைக் கொண்டது. தற்போது 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 1 கிராம ஊராட்சி ஆகிய 11 உள்ளாட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு 100 வார்டுகளைக் கொண்டுள்ளது. எனவே தற்போதுள்ள 100 உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறும், ஒவ்வொரு குழுவிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளின் தன்மைக்கு ஏற்றவாறும், ஒவ்வொரு குழுவிலும் குறைந்தபட்சம் 6 மற்றும் அதிகபட்சம் 15 என்ற வரம்பிற்குட்பட்டு குழு உறுப்பினர்களை நிர்ணயம் செய்யவும், அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பெண் உறுப்பினர்கள் இடம்பெறும் வண்ணம் நிர்ணயம் செய்யவும் மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண் 9602/2011/எம்.சி.8

## மாநகர மன்ற தீர்மானம் எண் 122 நாள் 11.11.2011

(i). கணக்குகள் குழு (ii) கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு (iii) சுகாதாரக்குழு ஆகிய மூன்று குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 (ஒன்பது) என நிர்ணயம் செய்து, இம்மூன்று குழுக்களில் ஒவ்வொரு குழுவிலும் பெண் உறுப்பினர்களுக்கான

ஒதுக்கீடு 3 (மூன்று) உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்தும், (iv) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு, (v) நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு (vi) பணிகள் குழு ஆகிய மூன்று குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 (பதினைந்து) என நிர்ணயம் செய்து, இம்மூன்று குழுக்களில் ஒவ்வொரு குழுவிலும் பெண் உறுப்பினர்களுக்கான இட ஒதுக்கீடு 5 (ஐந்து) உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்தும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

சிறப்புத் தீர்மானம் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள், தங்கள் வார்டுகள் சம்பந்தமான பொதுமக்களின் பிரச்சனைகள் குறித்து, மாநகராட்சி மற்றும் ஏனைய அதிகாரிகளை தொடர்புகொண்டு தெரிவித்து தீர்வு காணவும், பொதுமக்களுக்கு துரிதாக தொண்டாற்றிடவும் ஏதுவாக, அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு செல்போன் (Cell Phone) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கி வழங்கப்படும் என்ற தீர்மானம், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் 11.11.2011ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு, அனைத்து மாமன்ற உறுப்பினர்களாலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 01 நாள் 11.11.2011</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி